[3rd November 1958

Overspeeding of lorries on the roads

* 796 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

அதிவேகமாக ஓட்டிச்செல்லும் லாரிகளை அந்த ரோட்டில் பிரயாணஞ் செய்யும் கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகள் தணிக்கை செய்து கவர்ன்மெண்டுக்கு ரிப்போர்ட் செய்யவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் எத்தனை கெஜட்டுப் பதிவு பெற்ற அதிகாரிகள் இவ்வாறு தணிக்கை செய்து கவர்ன்மெண்டுக்கு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள் ?

THE HON. SRI V. RAMAIAH : The particulars (as on 1st August) are as below :—

	District.	Number of gazetted officers who reported cases.	Number of cases reported.
1	Coimbatore	7	29
2	South Arcot	7	11
3	Tiruchirappalli	2	5
4	Tirunelveli	4	15
5	Madurai	3	8
6	Salem	2	6
7	Chingleput	2	3
8	Ramanathapuram ..	1	1
9	Kanyakumari	—	Nil.
10	The Nilgiris	—	Nil.
11	North Arcot	—	Nil.
12	Tanjore	—	Nil.
	Total ..	28	78

SRI P. G. MANICKAM : மேற்கண்ட கேஸ்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு என்ன தண்டனைகள் விதிக்கப்பட்டன ?

THE HON. SRI V. RAMAIAH : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

SRI K. B. S. MANI : லாரிகள் வேகத்தைத் தடுப்பதற்கு 40 மைல் தான் போகவேண்டுமென்றால் அதற்குமேல் போகாமல் தடுப்பதற்கு அந்த லாரிகளிலேயே மீட்டர்கள் வைப்பதற்குத் தனி ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : லாரிகளின் வேகத்தை 40 மைல்தான் போகவேண்டும், 30 மைல்தான் போகவேண்டும் என்று நிரந்தரமாகக் கண்ட்ரோல் செய்வதற்கு சர்க்கார் ஆசைப்படவில்லை. அப்படிச் செய்தால் இன்றைக்கு இருக்கக்கூடிய போக்குவரத்து வசதி ஸ்தம்பித்துவிடுமென்று கருதுவதால், இது போன்ற ஆலோசனையை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை. வேகமாகப் போகலாம் அதே நேரத்தில் கவனமாகப் போகவேண்டும். கவனமாகப் போகிறார்களா இல்லையா என்று கவனிப்பதற்காகத்தான் கெஜட் பதிவு உள்ள அதிகாரிகளைக் கொண்டு அங்கங்கே கவனித்துக்கொள்ள உத்திரவிட்டிருக்கிறோம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is the Hon. Minister aware that a few months ago while he was on his way to North Arcot, he caught hold of a vehicle which was overloaded. May I know what action has been taken in the matter?

THE HON. SRI V. RAMAIAH : The hon. the Leader of the Opposition has referred to a lorry but that incident related to a bus.

3rd November 1958]

SRI A. A. RASHEED : Is there any proposal to empower M.L.As. to report against lorry drivers when they exceed the speed limit?

THE HON. SRI V. RAMAIAH : As I have stated, I have requested all Gazetted Officers to look into this matter but they have not yet taken full interest in the matter. Therefore, let me first find out whether I can speed up the matter as far as the Gazetted Officers are concerned, before I give effect to the suggestion of the hon. Member.

Third-crop paddy cultivation

* 797 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the extent of the area under the third-crop paddy cultivation in the State;

(*b*) of this, the area in Tanjore district; and

(*c*) the areas that could be brought under third-crop paddy in the different districts of the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The total area under third-crop paddy in the Madras State during 1956–57, for which figures are available, was 1,31,314 acres.

(*b*) The area in Tanjore district was 41 acres in 1956–57. The area in 1957–58 is reported to be 6,516 acres.

(*c*) No estimate could be given as the area will depend on the availability of water in the reservoirs.

SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபா நாயகர் அவர்களே, சில இடங்களில் குறிப்பாக நெல்லை மாவட்டம் போன்ற இடங்களில் மூன்றாம் போக சாகுபடிக்குத் தண்ணீர் கொடுத்த காரணத்தினால், இரண்டாவது போக பயிர்கள் தண்ணீர் இல்லாமல் நாசமாகிவிட்டன என்பது சர்க்காருக்குத் தெரியுமா? இதைப்பற்றித் திட்டவட்டமான உத்தரவு ஏதாவது பிறப்பித்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வப்போது அவ்வாறு கவனித்து வேண்டிய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இரண்டாம் போக பயிருக்கு தண்ணீர் போதுமானதாக சப்ளை செய்து மூன்றாம் போகத்திற்கு விடும்போது சில விவசாயிகள் அதைப் புரிந்து கொள்ளாமல் தவறுதலாகப் பிரசாரம் செய்கிறார்கள்.

SRI D. S. AUTHIMOOLAM : திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரபரணி பாசனம் ஸ்ரீவைகுண்டம் பாசனத்தில் மூன்றாம் போக சாகுபடிக்கு தண்ணீர் சப்ளை செய்வதன் மூலம் மேலே உள்ள நிலங்களில் இரண்டாம் போக சாகுபடியே தடைபடுகிறது. இதுபற்றி அரசாங்கத்தாருக்குப் புகார்கள் வந்ததா ? மூன்றாம் போக சாகுபடிக்குத் தண்ணீர் சப்ளை செய்வதற்கில்லை என்று இன்ஜினீயர்கள் சொன்னாலும் political pressure-ஆல் இங்கிருந்து விடவேண்டுமென்று ஆர்டர் போடுவதாக அங்கே சொல்லப்பட்டு வருவது சர்க்கார் காதுக்கு எட்டி இருக்கிறதா ?